செ.வெ.எண்:-719 நாள்:-28.11.12

## கால்நடை பராமரிப்புத்துறை அலுவலர்கள் ஆய்வுக்கூட்டம்

## மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு

28.11.2012 அன்று கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் மாண்புமிகு. **டி.கே.எம்.சின்னையா** அவர்கள், கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர்கள் ஆய்வுக்கூட்டத்தில் கலந்துகொண்டு துறையின் பணிகள் மற்றும் திட்ட பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் ஆணையர் மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

கால்நடை பராமரிப்புத்துறை மூலம் செயல்படுத்தப்படும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வரும் விலையில்லா கறவைப்பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள்/ செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டப் பணிகளின் முன்னேற்றம், குறியீடு மற்றும் சாதனை ஆகியவற்றைக் கேட்டறிந்தார். திட்டம் துவங்கப்பட்ட 18 மாத காலங்களில் திட்ட செயல்பாடு திருப்திகராமாக இருந்தபோதிலும், இனிவரும் காலங்களிலும், இத்திட்டத்தை மேலும் சிறப்பாக செயல்படுத்த வேண்டும் என துறை அலுவலர்களை கேட்டுக்கொண்டார். திட்ட செயல்பாட்டின்போது ஏற்படும் இடர்பாடுகளை உடனுக்குடன் மாவட்ட ஆட்சியர், துறைத்தலைவர் மற்றும் இதர அலுவலர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று தக்க அறிவுரை பெற்று திட்டத்தை தொடர்ந்து சிறப்பாக செயல்படுத்தவும், தேவைப்படும் நேரங்களில் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வரவும் அலுவலர்களை கேட்டுக்கொண்டார்.

விலையில்லா கறவைப்பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள்/ செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டங்கள் மேலும் சிறப்பாக நடைபெற ஆலோசனைகள் வழங்கினார். துறையால் மேற்கொள்ளப்பட்டு வரும் 607 கால்நடை நிலையங்களின் புதிய கட்டிடங்கள் கட்டும் பணிகள் மற்றும் 401 நிலையங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு பணிகள் உட்பட அனைத்து உள்கட்டமைப்புப் பணிகளின் முன்னேற்றம் குறித்து கேட்டறிந்தார். துறையால் மேற்கொள்ளப்பட்டு வரும் இதர பணிகள் மற்றும் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் ஆணையர் திரு.தர்மேந்திர பிரதாப் யாதவ்.இ.ஆ.ப. அவர்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் விளக்கமாக எடுத்துரைத்தார்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9